www.padippakam.com

ASSOCIATION GARGES TAMOULE WELFARE
கார்ஜு தமிழர் நலன் புரிச்சங்கம்

## திரு. சபாலிங்கம் அவர்களின் படுகொலையை கண்டிக்கின்றோம்!

கடந்த முதலாம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) திரு. சபாரட்ணம் சபாலிங்கம் அவர்கள் சார்சேலில் (Sarcelles) அவரது இல்லத்தில் வைத்து இரு இனம்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டமையை கார்ஜு தமிழர் நலன்புரிச்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

இனிமேல இழப்பதற்கு ஏதுமின்றி, எம் தேசத்தை விட்டு வெளியேறி, அந்நிய மண்ணில் புகலிடம் தேடி வாழும் நாம்; அந்நாடுகளின் சட்டதிட்டங்களை மதித்து, அம் மக்களுக்கு இடைஞ்சலின்றி, எமது தேசத்தின். தமிழ்பேசும் மக்களின் நன்மதிப்பைக் காப்பாற்றுவது! எம்மெல்லோரதும் கடமையாகும். இதைவிடுத்து வன்முறையில் ஈடுபடுவோமாயின், புகலிடங்களில்வதியும் தமிழ்பேசும் மக்களது இனிவரும் காலங்கள் மேலும்.....? குற்றவியல் சம்பவங்களின் காரணமாக பிரஞ்சு அரசு சகல தமிழ்மக்களும் வன்முறையாளர்கள் என்றபோர்வையில் திருப்பி அனுப்புவதற்கு தயங்காது என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும்.

ஆகவே இனியொரு பொழுதும் எந்தவொரு வன்முறைகளும் புகலிடங்களில் நடைபெறாதிருக்க, புகலிடங்களில் வதியும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் இச்செயலை வன்மையாக கண்டிப்போமாக.

**கார்ஜு தமிழர் நலன்புரிச்சங்கம்**
(கார்ஜு - பிரான்சு)